முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 9/2021

**வாதி தரப்பு சாட்சி-3 தியாகராஜன் திரு.M.கோபிநாத் பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 03.04.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. ரவிச்சந்திரன் என்னை அழைத்து வந்தாரா என்றால் ஆமாம். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை ரவிச்சந்திரன் தான் சொன்னாரா என்றால் ஆமாம். தாவா ஏ அட்டவணை சொத்து யாருக்கு சொந்தமானது என்றால் தெரியாது. ஏ அட்டவணை சொத்து என்ன என்பது எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு கிழக்குபுறம் சதீஷ் நிலம் உள்ளது. செல்லம்மாளுக்கு பட்டா கொடுத்துள்ளார்களா என்றால் கொடுத்துள்ளார்கள். சதீஷ் நிலத்திற்கு மேற்குபுறத்திலும், ரவிச்சந்திரன் நிலத்திற்கு வடபுறத்திலும் செல்லம்மாள் நிலம் உள்ளது என்றால் சரிதான். செல்லம்மாள் உயிருடன் இருக்கிறாரா என்றால் இருக்கிறார். செல்லம்மாள் சத்துணவில் சமையலராக இருந்தார்.

2) பொதுவாக ஒரு நிலத்தை கிரையம் பெறுவதற்கு அதை பத்திர அலுவலகத்தில் பதிவு செய்யவேண்டும் என்றால் சரிதான். செல்லம்மாள் சதீஷ் மற்றும் ரவிச்சந்திரனுக்கு அத்தை உறவுமுறை என்றால் சரிதான். ஏற்கெனவே செல்லம்மாள் பெயரில் தான் வீட்டுவரி ரசீது மின்இணைப்பு ஆகியவை இருந்தது என்றால் சரிதான். செல்லம்மாள் உண்மையில் கிரையம் செய்திருந்தால் அதை பத்திர அலுவலகத்தில் பதிவு செய்திருப்பார் என்றால் சரியல்ல. கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார். செல்லம்மாள் 2020 ம் வருடம் தன்னிடம் பிரச்சனை செய்வதாக ரவிச்சந்திரன் மற்றும் வாதி செல்வராஜ் மீது நிலஅபகரிப்பு பிரிவில் புகார் கொடுத்தாரா என்றால் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் அவ்வாறு தான் உள்ளது. ஆனால் செல்லம்மாள் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் சொல்வது தவறு என்றும், செல்லம்மாள் தன்னிடம் பிரச்சனை செய்ததற்காக புகார் கொடுத்தார் என்றும், ரவிச்சந்திரன் என் நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) 1ம் பிரதிவாதியிடமிருந்து, 2ம் பிரதிவாதி கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றும், வாதிகள்தான் பிரதிவாதிகளுக்கு இடையூறு ஏற்படுத்தவேண்டி பிரச்சனை செய்ததால் செல்லம்மாள் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு விபரங்கள் தெரியாது என்றும், வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**